**Sub Court, Eraniel**

**O.S. No.29/2023**

Date:06.10.2025. .

வா.சா.2 - திரு. ஜான் கிங்சிலி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் தரப்பினர் கிடையாது என்றால், சரிதான். வாதி அருள் ஜான் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால், சரிதான். நான் வழக்கு சொத்திற்கு பக்கத்தில் குடி வசிக்கவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.6297 ஆகும். அதற்கு ஈடான ரீசர்வே எண்.736/11,12,13 மற்றும் 736/14 ஆகும். பழைய சர்வே எண்.6297 க்கு புதிய சர்வே எண்கள் 736/4,6 மற்றும் 8 என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த பழைய சர்வே எண் 6297 க்கான கோரிலேசன் சான்று எதனையும் நான் பார்திருக்கிறேனா என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் இரண்டு சென்டுகள். அந்த சொத்தின் கிழக்கு பக்கம் ரோடு, மேற்கு பக்கம் தங்கவேல் மனை. பிரதிவாதிகளின் சொத்து சர்வே எண்.736/12 ன் வடக்கு பக்கம் உள்ளது. சர்வே எண்.736/12 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால், அதில் எங்களுக்கு 2 சென்டு பாத்தியம் உள்ளது. அது தவிர அவர்களுக்கு பாத்தியம். சர்வே எண்.736/12, சர்வே எண்.736/13 விட 6 முதல் 7 அடி பள்ளமான இடம் என்றால், 4 முதல் 5 அடி பள்ளமான இடம் ஆகும். வாதி எனது அண்ணன் எங்களுடைய சொத்தில் உரிமைகேட்டும், பிரதிவாதிகள் அதில் தொல்லை செய்யகூடாது என்று பரிகாரம் இந்த வழக்கில் கோரியுள்ளார். எனது சகோதரர் தாக்கல் செய்த வழக்குரையை பற்றி விபரம் எனக்கு எனது

சகோதரர் சொன்னார். பிரதிவாதிகளின் தரப்பு பற்றிய விபரம் எனக்கு அவர் சொல்லவில்லை. சர்வே எண்.736/12 மற்றும் சர்வே எண்.736/13 யை பிரிப்பதற்கு 70 வருட பழைய கல் சுவர் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண்.6297 ன் மொத்த விஸ்தீரணம் 13 1/2 சென்டு. எனது சகேதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மொத்த விஸ்தீரணம் 57 சென்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.736/12 ல் உள்ள சொத்துகளை குறித்து பிரதிவாதிகள் 2008 ல் பாகபத்திரம் வைத்துக்கொண்டார்கள் என்றால், சரிதான். 2008 ல் சொத்தினை அளந்து பாகபத்திரம் ஏற்படுத்திய விபரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். அவ்வாறு அளந்தபோது 2 சென்டு இடத்தை தனியாக அளந்து கல்போட்டிருந்தார்கள். பாகபத்திரம் எழுதிய விபரம் எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. அந்த பாகபத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. 08.03.1957 ல் உள்ள கிரைய ஆவணத்தின் அசல் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறோம். அந்த கிரைய ஆவணத்தினை நான் படித்து பார்த்திருக்கிறேன். அது எனது தாத்தா சிலுவை ராயன் வாங்கிய கிரைய பத்திரம். அதனை நான் 2020 ல் படித்து பார்த்தேன். எனது தம்பி அருள் ஜான் வாதிக்கு அந்த இடத்தை எனது தகப்பனார் எழுதிக்கொடுக்க முற்பட்டபோது அந்த ஆவணத்தினை நான் படித்து பார்த்தேன். எனது தம்பிக்கு, எனது தகப்பனார், எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தில் நான் சாட்சி கிடையாது . 1957 முதல் 2022 வரை சர்வே எண்.736/12 க்கு எனது தாத்தாவோ, எனது தகப்பனாரோ கரம் செலுத்தியதாக கரதீர்வை ரசீதுகள் இல்லை என்றால், சரியல்ல என் தாத்தா பெயரில் கரதீர்வை செலுத்தப்பட்டுள்ளது. அப்பா பெயரில் 2022 ல் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2022 ல் பட்டா

பெயர் மாற்றம் செய்யப்பட்டது ரத்து செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி ரத்து செய்யப்பட்ட உத்தரவினை படித்து பார்த்தேன். 2022 ல் படித்து பார்த்தேன். அந்த உத்தரவிற்கு மேல்முறையீடு செய்தோமா என்றால், முதல் அமைச்சர் முதலானோருக்கு மனு கொடுத்தோம். அதில் உத்தரவு ஏதும் வரவில்லை. எனது முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள, வழக்கு சொத்தில் உள்ள 50 வருட பழைய புளியமரம் பற்றி , எனது தாத்தா வாங்கிய கிரைய ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அந்த புளிய மரத்தினை 2000 ல் எனது அப்பா விலைக்கு கொடுத்துவிட்டார். வழக்கு பட்டிகை சொத்தில் புளிய மரம் நின்றதாகவும், அதனை எனது அப்பா விற்று விட்டதாகவும் வாதி வழக்குரையில் கூறவில்லை என்றால், சரிதான். வாதி சிறியவர் என்பதால் அவருக்கு அதுவிபரம் தெரியாமல் இருக்கலாம். எனக்கு தான் தெரியும். வழக்கு பட்டிகை சொத்தில் வாழை மற்றும் ஊடுபயிர்கள் செய்ததாக குறிப்பிடுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இதுசம்பந்தமாக ஆவணங்கள் உள்ளன, அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். சர்வே எண்.736/12 ல் பிரதிவாதிகள் செய்த பாகபத்திரத்தின் அடிப்படையில் வீடு கட்டியிருக்கிறார்கள் என்றால், சரிதான். எந்த ஆண்டு வீடு கட்டினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அங்கிருந்த பழைய வீட்டை இடித்தார்கள். வழக்கு பட்டிகை சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், அதில் நான் குறிப்பிடும் 2 சென்டு இடம் இல்லை என்றாலும், சரியல்ல. வாதி நீதிமன்ற ஆணையர் கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. 08.03.1957 ல் பத்திரத்தில் உள்ள

சொத்திற்கும், சர்வேஎண்.736/12 ல் உள்ள சொத்திற்கும் சம்பந்தம் ஏதும் கிடையாது என்றால் , சரியல்ல. 2022 ல் போலியாக எனது அப்பா பெயரில் பட்டா வாங்கி, மோசடியாக எனது சகோதரர் பெயரில் ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்டது என்றால், சரியல்ல. வாதி பெயரில் உள்ள செட்டில்மென்ட் ஆவணம் போலியான செல்லாத ஆவணம் என்றால், சரியல்ல. எனவே அந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.